உ

கடவுள் துணை.

மதுரைத் தமிழ்

நூல் ஆசிரியர்.—

திருவெண்ணெய் நல்லூர்

இரசபட போதித்தியாயர் அவர்கள்

இந்நூலைப் புதிய முறையில் அமைத்தெழுதியவர்:

அ. மறைதேசை செட்டியார் அவர்கள்.

இவர் திருமுருகாற்றுப்படை பரிமேலழகர் உரை, நீதிநெறிவிளக்கம் விருத்தியுரை, மாதர்நீதி முதலிய நூல்களைப் புதிய முறையில் அமைத்துக் கொடுத்தவரும், சாமாவளி கதம்பத்தை ஸம்ஸ்கிருத உச்சரிப்புக் கிணங்க நூதன முறையில் தமிழில் எழுதித் தொகுத்தவரும், யஜுர்வஸ் த்ரிகால ஸந்தியா வந்தன மந்திரத்தை ஸம்ஸ்கிருத உச்சரிப்புக் கிணங்கப் புதிய முறையில் விசேஷக் குறிப்புகளுடன் எழுதியவரும், மஹான்-சாது-ஸ்ரீ-ஸை-இத்தின சற்குரு அவர்களின் பாத சேகரருமானவர்.

ஸ்ரீ சாது இத்தின சற்குரு புத்தகசாலை,
434, கெயினியப்பமுதலி தெரு,
பார்க் டவுன், சென்னை,
விலை ரூ] விலை அணா 8. [1928.

முனிவர் பலர் தத்தம் பெயரினைற் செய்த தரும நூலில் இனிமை தரும் ஆசாரம், வியவகாரம், பிராயச் சித்தம் என்னும் முக்காண்டங்களில், எழிலான வியவ கார காண்டத்திலே இராசப்ப உபாத்தியாயரால் சிற் சில எடுத்து இயற்றமிழினலே மநுநீதி சதகம் என்று அருள் வடிவமான பழமலை நாதர்மேற் பாடப்பட்டது இந்நூலாமென்க.

Copy-right Registered and All Rights Reserved of this book belongs to.

SRI SADHU RATHNA SARGURU BOOK-DEPOT

Park Town P. O, Madras.

மதுரீதி

சதகம்

நீதிகளைப் புகட்டும் நூல்

மாதர்கள் தேடும் நூல்

குடும்பத்தை ஒழுங்காக நடத்தும் சிறந்த நூல்

மாதர் நீதி

[மூன்று பர்வம்]

பத்திரிகைகளால் புகழப்பெற்ற

திருத்தமான 5-ம் பதிப்பு

[அ. மஹாதேவ செட்டியாரவர்களால்
புதிய முறையில் அமைக்கப்பெற்றது.]

இந்நூலைப் பற்றி எங்களுக்குத் தினமும் அநேக ஆர்டர்கள் வந்து குவிகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் இந்நூல் அவசியம் இருக்கவேண்டுமாதலால், இந்நூலைக் கண்டோர் யாவரும் தம் பந்து மித்திரர்களுக்கும் தம் புத்திரிகளுக்கும் மனைவிமார்களுக்கும் வாங்கிக் கொடுக்கின்றனர். இந்நூலில் ஒன்றை வாங்கிப் பரிசு மளிக்கின்றனர். நீதியுடன் இல்வாழ்க்கையை ஒழுக்கமாக நடத்துவதற்கு அறியாதவருக்குத் துன்பமேதவிர இன்பம் ஜனிப்பதில்லை என்பது உறுதியாம். இந்நூல் கல்விகற்கும் பர்வம், கணவரோடு கூடி வாழும் பர்வம், முதுமைப் பர்வம் என மூன்று பர்வங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது; ஒவ்வொரு பர்வத்திலும், மாதர்கள் நீதியாக வாழ்வதற்குரிய அநேக நீதிகளும், அந்நீதிகளைப் போதிக்கும் கதைகளும், அநேக நீதிகளின் மேற்கோள்களும் விளக்கமாக எழுதப்பட்டிருக்கின்றன.

இம்மாதிரியான நூல் இதுகாறும் தமிழில் வெளிவந்ததில்லை; இந்நூல் 5-பதிப்பாக வெளிவந்திருப்பதே இதற்குப் போதுமான சாக்ஷியாகும். இந்நூல் கலியாணமான பெண்களுக்கும் இனி மேல் கலியாணம் செய்துகொள்ளும் பெண்களுக்கும் மிக அவசியமான பொக்கிஷமாகும். உயர்ந்த கிளாஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு, அழகிய பயிண்டுடன் விலை ரூபா 1—0—0.

உயர்ந்த பெதர்வெயிட்டுக் கடிதத்தில் அச்சிடப்பட்டு, காலிக்கோ ஸ்பெஷல் பயிண்டுடன் கூடியது விலை ரூபா. 1—8—0

உ

கடவுள் துணை

அணிந்துரை

கல்வியறிவிற் சிறந்த பெரியோர்களுக்கு அடியிற் கை யொப்பமிட்ட அடியேன் வணக்கமாகத் தெரிவித்துக் கொள் வது:

மநுநீதி சதகம் என்னும் பெயரோடுகூடிய ஓர் சதகம் நெடுங் காலத்திற்கு முன் வெளிவந்துள தது பலர்க்குந் தெரிந்திருக் தல் கூடும். இதன் ஆசிரியர் திருவெண்ணெய் நல்லூர்-ஸ்ரீமத் இராசப்ப உபாத்தியாயர் அவர்கள்; இராசப்ப நாவலர் என்றும் வழங்கப்படுவர்.

இந்நூலை வாசிப்பதற்கு முன் இந்நூல் வரலாற்றைப்பற் றிச் சிறிதேனும் தெரிந்திருப்பது நலமாகையால், அஃது இங் குச் சுருக்கமாகக் கூறப்படுகிறது. இந் நூலாசிரியர் தமது நூலின் ஆரம்பத்தில் காப்புச் செய்யுளின் கீழ், நூல் வரலாறும் அவையடக்கமும் என்ற தலைப்புக் கொடுத்து ஓர் செய்யுள் பாடியுள்ளார். அதனால் இந்நூல் வரலாறு தெரியவருகிறது. இதன் விவரம் வருமாறு:—

மநு, பிதாமகன், நாரதன், தேவலன், கௌதமன், சங்கலி தன், வியாசன், மரீசி, பிரகற்பதி, வசிஷ்டன், அத்திரி, யாஞ்ஞ வற்கியன், பிருகு, போதாயனன், இயமன், விஷ்ணு, தாரே சுரன், காத்தியாயனன் முதலிய முநிவர்கள் தங்கள் தங்கள் பெயரில் ஸ்மிருதிகள் அருளிச்செய்தனர். மேற ஸ்மிருதி கள் என்னும் தரும சாஸ்திரங்களில் ஆசார காண்டம், வியவ கார காண்டம், பிராயச்சித்த காண்டம் என்னும் மூப்பகுதிகள் அடங்கியுள்ளன. மேற மூப்பகுதிகளுள் வியவகாரகாண்டத்தி

லேயுள்ள விஷயங்களுள் சிலவற்றை நம் தமிழ்மக்கள் அறிந்து கொள்வான் வேண்டி இந் நூலாசிரியர் தமிழ்ச் செய்யுளிற் பாடி, ஒரு நூலாகத் தமிழுலகத்துக்கு அளித்தனர்.

இந் நூலுள் பெரும்பான்மையாக வியவகார சம்பந்தமா யுள்ள விஷயங்களும், சிறுபான்மையாக நீதிவிஷயங்களும் அடங்கியுள்ளன. பலவிதமான வியவகாரத் துறையுள் பிரவேசிப் போர்க்கு இந் நூல் பயன் தருவதாம். வியவகாரத்தில் ஈடுபடாதவர்களும், வியவகார விஷயத்தில் சிறிதும் பயிற்சியில்லாதவர்களும் இந் நூலை வாசிப்பாராயின், அன்னோர்க்கு வியவகார விஷயத்தில் பயிற்சி உண்டாகும். மேலும், இந் நூல், அருள்வழிவமான பழமலாநாதர்மேல் துதி நூலாயும் அமைந்துள்ளது. இந் நூலின் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலும் துதி காணப்படுகிறது. இதேபோன்று ஆத்திசூடி புராணம் என்னும் நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் நீதியும் துதியும் அமைந்துள்ளன.

* மநு ஸ்மிருதி யென்னும் மநுதர்ம சாஸ்திரமானது எல்லா ஸ்மிருதிகட்கும் தலைமையாயுள்ளது. "இந்த ஸ்மிருதி கூறிய விஷயங்களுக்கு விரோதமாக இதர ஸ்மிருதிகள் கூறின், அவை பிரமாணங்க ளாகா" என்று அன்னோர் கூறுவர். இந்த ஸ்மிருதி கூறிய சில விஷயங்கள் இக்கால அநுஷ்டானத்தி லில்லை; முன் யுகங்களிற் பிரமாணமாயிருந்தன. இக் கலியுகத்திற் பிரமாணமாயுள்ளது ஸ்ரீ பராஸர ப்ரஹ்மரிஷி இயற்றியருளிய பராசர ஸ்மிருதியேயாகும். இந்த ஸ்மிருதிதான் இக்காலத்தில் அநுஷ்டானத்தி லிருப்பதாம்.

"மநுஸ்மிருதி கூறியுள்ள விஷயங்களிற் பல ஆகேஷபத்திற் கிடமாயுள்ளன" என்றும், "புராண இதிகாசங்களாற் கூறப்பட்டுள்ள ஜாதி சம்பந்தமான விஷயங்களும் ஆகேஷபத்திற்

---

* மநு தர்ம சாஸ்திர வசனம், உயர்ந்த காலிகோ பயிண்டடன் விலை ரூபா 2.

கிடமாயுள்ளன'' என்றும் கூறப்படுகின்றன. அவற்றைப்பற் றிப் பத்திரிகைகளில் பலமான கண்டனங்களும் வெளிவந்து கொண்டுள்ளன.

"ஒரே குற்றத்தைப் பிராமணன் செய்தால் அவனுக்கு ஒரு விதமான தீர்ப்பும், இதர ஜாதியார்கள் செய்தால் அவர்க ளுக்கு வேறொருவிதமான தீர்ப்பும் மநுஸ்மிருதியால் கூறப்பட் டுள்ளன. பிராமணர்கள் ஒவ்வொரு துறையிலும் தங்களுக்கும் தங்கள் சார்பார்களுக்கும் எவ்வளவு சாதகங்கள் தேடிக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு சாதகங்களையும் ஸ்மிருதிகளிலும் புரா ணேதிகாசங்களிலும் சட்டதிட்டங்களாக அமைத்துக்கொண்டு இதரஜாதியார்களை நெடுங்காலமாகத் தலையெடுக்க வொட்டாமல் அடக்கி ஆண்டுகொண்டு வருகிறார்கள்'' என்று சிலர் கூறுகின்ற னர்.

மநுஸ்மிருதியால் கூறப்பட்டுள்ள சில கண்டனை விஷயங்க ளைப் பார்வையிடும்போது, அவற்றை வாசிப்போர்க்குக் குடல் நடுக்கம் உண்டாதல் கூடும்; 'இப்படிப்பட்ட கொடுமையான சட்ட திட்டங்களுடம் அக்காலத்தில் அநுஷ்டானத்தில் இருந்து கொண்டுவந்தனவல்லவோ' என்று மனம் பதைக்கும்.

மநுஸ்மிருதியாற் கூறப்பட்டுள்ள ஆசௌச விஷயங்களைப் பற்றிச் சிலர் ஓர்ந்த சமாதானம் கூறுகின்றனர். அவை வரு மாறு:—"வேத ஸ்மிருதியால் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அவ் வளவும் மநு என்பவரின் சொந்த அபிப்பிராயம் அன்று" என்பதும், "அக்காலத்தில் அநுஷ்டானத்திலிருந்த விஷயங் களையெல்லாம் அவர் ஒருகோவைப்படுத்தி ஸ்மிருதியேற் படுத்தினர்" என்பதுமேயாம். இது எவ்வளவுதூரம் உண்மையா மென்பதை ஈசனே அறியவேண்டும். நாம் ஒன்றும் கூறுவதற் கில்லை. நிற்க;

"வேதங்களை ஆராய்ச்சி செய்தால் ஜாதி சம்பந்தமான விஷயங்கட்கு அவற்றில் ஆதார மில்லை" என்பர் சிலர். "புராணேதிகாச காலங்களிலேதான் ஜாதிக் கட்டுப்பாடு உண்டாயிற்று" என்பர் சிலர்.

"ஆன்றோர்கள் அக்காலத்தில் தொழிலை முன்னிட்டு நான்கு ஜாதிகள் ஏற்படுத்தினர்கள்" என்றும், "பிறகு காலஞ் செல்லச் செல்ல மதி குறைந்தவர் ஆதிக் கோட்பாட்டை மறந்தே தா, அல்லது மறைத்தே தா 'பிறப்பிலேயே உயர்ந்த ஜாதி' என்றும், 'தாழ்ந்த ஜாதி' என்றும் கூறி ஒரு கட்டுப்பாட்டை அமைத்துக் கொண்டனர்" என்றும், "இதற்குத் தகுந்தவாறு புராணேதிகாசங்களில் பிரமாணங்கள் அமைத்துக்கொண்டனர்" என்றும் சிலர் கூறுப.

"உயர்ந்த ஜாதியிற் பிறந்தவன் தாழ்ந்த ஜாதியில் இனிப் பிறவான்" என்பர் சிலர். "உயர்ந்த ஜாதியிற் பிறந்தவன் மீண்டும் தாழ்ந்த ஜாதியிற் பிறவான் என்று கூறுவது கூடாது" என்றும், "விஜனப்பயனுக்குத் தக்கவாறு மீண்டும் தாழ்ந்த யோனிகளிலும் பிறத்தல் கூடும்" என்றும், "இதற்குச் சில சரித்திரங்களே சான்று" என்றும் வேறு சிலர் கூறுவர்.

இவ்விதம் ஒரு பகுதித்தார் கூறுவதை மற்றொரு பகுதித்தார் மறுப்பதும், ஒவ்வொரு பகுதித்தாரும் தாங்கள் மறுத்த விஷயங்களுக்குப் பலமான ஆதாரங் காட்டிப் பத்திரிகைகளில் பலமான வாதங்கள் வெளியிடுவதுமாயிருக்கின்றனர். அவற்றையெல்லாம் இச் சிறு நூலில் கூறுவதென்பது விஷயம் மிக விரிந்துபோம். நெடுங்காலமாகப் பிராமணர் பிராமணரல்லாதார் ஆகிய இரு தரத்தாருள்ளும் ஒற்றுமை குறைந்து வருவதும், வைஷம்மியம் மிகுந்துகொண்டு வருவதும் மிக வருந்தத்தக்கனவேயாம். இவ்வித துரவஸ்தை நீங்கி நாடு சோபமடைவதும் காலம் என்று வருமோ? அறியோம்.

'எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்' என்பது ஆன்றோர் விநி. ஆதலால், இந்நூலை வாசிக்கும்போது சில செய்யுட்களிற் கூறப்பட்ட விஷயங்கள் சிலர்க்கு ஆக்ஷேபகரமாகத் தோன்றலாம்; அது காரணமாக மனத்தின்கண் ஓர்வித எண்ணம் உண்டாகலாம். இந்நூலை வாசிப்பவர்கட்கு அன்போடு தெரிவித்துக்கொள்ளும் விண்ணப்பம் ஒன்று உண்டு. அஃதாவது, ஆக்ஷேபகரமான விஷயங்கள் தோன்றுமிடங்களில் 'இப்படிப்பட்டசட்ட திட்டங்களும் அக்கால வழக்கில் இருந்து கொண்டுவந்தனவல்லவோ?' என்று நினைத்து, உடனே அவற்றை மறந்து, மனதைச் சாந்தி செய்துகொள்ளல் வேண்டும். மற்றப்படி நூலையாவது, நூலாசிரியரையாவது பழித்தலில் ஒரு பிரயோஜனமும் இன்று. ஹம்சப்பக்ஷி போன்று சத்தான விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு, அசத்தான பாகங்களைத் தள்ளிவிடுவதே நலம்.

இந்நூலைப் பதிப்பித்த எனது நண்பரவர்கள் வேண்டுகோளின்படி மேற்கூறிய விஷயங்களை இங்குக் கூறும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டது. எவரையும் குறை கூறவேண்டுமென்பது எமது அபிப்பிராயமன்று. நாட்டிலுள்ளார் துவேஷபுத்தி பாராட்டுவதினின்றும் நீங்கி ஒன்றுகூடி வாழவேண்டுமென்பதே எமது அபிப்பிராயமாம்.

இந்நூலிலுள்ள குற்றங்களுக்குத் தண்டனை கூறும் சில செய்யுட்களின் விஷயங்கள் ஆக்ஷேபத்திற் கிடமானவையாகவும், பாரபக்ஷத்திற்கு இடமானவையாகவும் காணப்படலாம். அப்பாகங்களைப் படிக்கும்போது சிலர்க்கு வருத்தமும் ஆத்திரமும் தோன்றுதல் கூடும். ஏனெனில், ஓர் குற்றத்தைப் பிராமணன் செய்தால் அவனுக்கு ஒருவிதமான தண்டனையும், அதே குற்றத்தை ஏனையோர் செய்தால் அவர்களுக்கு வேறொருவிதமான தண்டனையும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இது பலர்க்

கும் ஆசேஷபகரமாகத் தோன்றும். இம்மாதிரி விஷயங்கள் பலத்த விவாதத்திற் குரியனவாகும். இந்நூலை வாசிப்பவர்கள் ஒருவிஷயத்தை முக்கியமாக ஞாபகத்தில் வைத்தல் வேண்டும். இந்நூலுள் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அவ்வளவும் இந்நூலா சிரியரின் அபிப்பிராயமன்று. பல ஸ்மிருதி கர்த்தர்களின் அபிப் பிராயங்களையே இவர் தாம் பாடிய நூலில் அமைத்துள்ளார். இதனால் நூலாசிரியர்மீது நாம் யாதொரு தோஷாரோபணமும் கூறுதல் கூடாது. விபவகாரவிஷயத்தில் சிறிதும் பயிற்சி பெறுத மக்கள் பலருளரன்றே? அன்னோர் சிறிதளவும் பயிற்சி பெறுவான்வேண்டி இந் நூலாசிரியர் கருணைபோடு இந்நூலை அருளிச் செய்துள்ளார். நிற்க;

விக்வத் சிரோமணிகள் பலர் தாம் அடைந்த ஆநந்தத்தை உலகத்தாரும் அடைய விரும்பித் தமது சுவாநுபவத்தில் உதித்த விஷயங்களை மிகவும் காருண்யம் நிறைந்த சிந்தையுடன் சாஸ்திரங்களாக அருளிச்செய்து நம்மனோர்க்குப் பெரும் புண்ணியம்போல் வைத்துவிட்டுப் பூதவுடம்பை நீக்கிப் புகழுடம்பு பெற்று மறைந்தனர். ஒரு பிதாவானவன் தான் நெடுங்காலம் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த திரவியத்தைத் தன் வயிற்றில் பிறந்த மக்களுக்கும் சுற்றத்தார்க்கும் பங்கிட்டுவிட்டு இவ்வுலகை விட்டு நீங்கிவிடுகின்றான். நம் விக்வத்சிரோமணிகள் தம் தமிழ்ச்சந்ததி யார்க்கு ஆஸ்தியாக வைத்த பெருநிதியான சாஸ்திரங்களோ இன்னருக்குத்தான் சொந்த மென்பதில்லை; உலகத்தில் எல்லா ருக்குமே அவற்றில் பாத்திய முண்டு. இதற்கு உதாரணமாகத் திருவள்ளுவதேவர் அருளிச்செய்த ஒப்புயர்வற்ற திருக்குறளை எடுத்துக்கொள்வோம். இந்நூலின் டகிணமையைத் தமிழ் உலகம் மட்டும் அன்று, பிரபஞ்ச முற்றுமே கொண்டாடுகிறது. இது எல்லோர்க்கும் அநுபவ பூர்வகமாகத் தெரிந்த விஷயந்தானே. இதற்குச் சாட்சியும் வேண்டற்பாலதோ? இதற்கு அடுத்து

ஸ்ரீமத் இராமாயணத்தை எடுத்துக்கொள்வோம். இந்நூல் வெளிவந்து பல நூற்றாண்டுகள் கடந்தும் இன்றும் எவ்வளவு பெருமையுடன் பலராலும் கொண்டாடப் படுகின்றது, ஸ்துதி செய்யப்படுகிறது? இவ்வித மகத்துவம் வாய்ந்த நூல்களெல்லாம் தெய்வ கவியும், ஜீவ கவியும் பொருந்தியனவாகும். அதனாற்றான் அவை பல மகஸ்தர்களாலும் கொண்டாடப் படுகின்றன; இதனாலே பலரும் பாத்தியம் கொண்டாடுகிறார்கள்.

நம் புலவர்கள் அருமையாடு பட்டுச் செய்த சாத்திரங்களோ அநந்தம். அவற்றுள் பல ஆதரிப்பாரின்மையால் நெடுங்காலத்திற்கு முன்னரே மறைந்து போயின; மற்றும் பல மறைந்து கொண்டிருக்கின்றன. எஞ்சியுள்ள நூல்களேயெனும் மறைந்து போகாவண்ணம் ஆதரித்தல் நம் தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட கடமையன்றோ? அதனிலும் நம் தாய்ப்பாஷையின்மீது ஆர்வங் கொண்டுள்ள பலர்க்கும் கடனன்றோ? நம் தமிழ்ப் பாஷையிலுள்ள நூல்களைத் தமிழ்மக்களாகிய நாமன்றோ ஆர்வத்துடன் வெளிப்படுத்தி நம் தமிழ் உலகுக்கு உபகரித்தல் வேண்டும்? நாம் செய்யாவிட்டால் நமக்குப் பதிலாக அன்னிய பாஷையாரா இதில் பிரவேசிப்பார்கள்? பிற பாஷையார் தங்கள் தங்கள் தாய்ப் பாஷையிலுள்ள நூல்களை என்ன அருமையாடு பட்டுக் காப்பாற்றுகிறார்கள்? நாம் பட்டும் அசிரத்தையோடிருப்பதென்? அது நம் தமிழ்த்தாய் செய்த தவப்பயனே போலும்! நிற்க; இனி இந்நூல் சம்பந்தமான விஷயத்தைத் தொடர்ந்து சொல்வோம்.

மநுநீதி சதகம் என்னும் இந்நூல் நெடுங்காலத்திற்கு முன் வெளிவந்ததாகத் தெரிகிறது. இதற்குப் பிறகு இதன் மறுபதிப்பு வெளிவந்ததும் வாராததும் தெரியவில்லை. இந்நூலை இப்போதுதான் யான் பார்க்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்

டது. மநுநீதி காதல் என்னும் பெயருடன் கூடிய ஒரு நூல் தற்காலம் வழங்கப்பட்டு வருகிறது. ஆயினும், மநுநீதி சதகம் என்னும் பெயருள்ள நூலை இதுவரையில் யான் கேட்டறியேன்.

இந்நூலை வெளிப்படுத்தியவரும், மஹான்-சாது-ஸ்ரீ சை. இரத்தின சற்குரு புத்தகசாலையின் அதிபரும், வெ. சற்குரு அவர்களின் பௌத்திரரும், லோகோபகாரமாகப் பல சாத்திரங் களை வெளியிட்டுக்கொண்டு வருபவரும், பழமைமையான சாஸ்தி ரங்களுள் சிலவற்றையேனும் ஒன்றன்பின் ஒன்றாக வெளிக்குக் கொணர்தற்குப் பிரயத்தனஞ் செய்துகொண்டு வருபவரும், நெடுங்காலமாக எனக்கு நண்பராயுள்ளவருமாகிய ம-ள-ள-ஸ்ரீ சை. ந. பாலசுந்தரஞ் செட்டியாரவர்கள் வெ. சதகத்தை அச் சிட உத்தேசித்துப் பிரதிக்காக முயன்றபோது பிரதி கிடைப் பது மிக அரிதாகிவிட்டது. பிறகு, அடியேனுக்குச் சில காலம் ஆசிரியராயிருந்த சென்னை ஹிந்து தியலாஜிகல் உயர்தரக் கலாசாலைத் தலைமைத் தமிழ்ப் புலவரும், திருக்குறள் விரிவுரை-கைவல்ய நவநீதம்-வேதாந்த சூடாமணி முதலிய பல சாஸ் திரங்களின் விரிவுரை ஆசிரியரும், இலக்கண - இலக்கிய - தரு க்க - வேதாந்த போதகாசிரியருமான மஹான் - சாது - ஸ்ரீமான்-கோ. வடிவேலுசெட்டியாரவர்கள் தம்மிடமிருந்த மிகப்பழைய பிரதியொன்றைக் கருணையுடன் கொடுத்துதவிசெய்தார்கள். அவர்கள் மனமுவந்து வெ. பிரதியைக் கொடுத்திராவிடில் இந் நூல் வெளிவருதற்குக் காரணமே யில்லை. இந்நூல் வெளிவரு வதற்கு அவர்களே காரணமாவார்கள். அதுபற்றி அவர்களுக்கு நன்றிகூறப் பலரும் கடமைப்பட்டுள்ளார்கள்.

வெ. எனது நண்பரவர்கள் வெ. நூலை என்னிடங் கொடு த்து, இதனைச் சிறந்த முறையிலும், நூதன முறையிலும் அமை த்துத் தருமாறு கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் அன்போடு தெரிவித்த உத்தரவுக் கிணங்கி, 'இதன எந்த முறையில் அமை

தால் அது பலர்க்கும் பிரயோசனமாகும்' என்பதைச் சிந்தித் தேன் இந்நூல் பலர்க்கும் பிரயோசனமாகுமாறு, இதற்கு முன் சிலநூல்களைப் புதிய முறையில் வெ எனது நண்பரவர்களுக்கு அமைத்துக் கொடுத்ததுபோன்று, இந்நூலையும் நவீன முறை யை யனுசரித்துத் தயார் செய்தேன். இதுகாறும் ஒரு சதகந்தா னும் இந்த முறையை யனுசரித்து வெளிவந்தது கிடையாது.

இந்நூலில் கடின சந்திகள் பிரிக்கப்பெற்றுள்ளன; கூடிய வரையில் சந்தங் கெடாதவாறு சந்திகளைப் பிரித்திருக்கின் றேன். சந்தி பிரிப்பதனால் சந்த இன்பம் சிறிது குறையு மென்று தோன்றின விடங்களில் அவ்வாறு பிரிக்கப்பட்ட சில ஒற்றெழுத்துகள் () இவ்வித இருதலைப் பிறைக்குள் காட் டப்பட்டுள்ளன. சமயோசிதமான வாசகக்குறிகள் ஒவ்வொரு செய்யுளிலும் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு செய்யுளையும் வாசிக்கும்போதே கூடியவரையில் பொருளுணர்ந்துகொள்ளு மாறு இந்நூலை அமைத்திருக்கின்றேன். இந்நூலிலடங்கியுள்ள ஒவ்வொரு விஷயமும் இன்ன இன்ன பக்கத்திலடங்கியிருக்கிற தென்கிற விவரம் தெரிந்துகொள்ளும் பொருட்டு விஷய அட் டவணை யொன்று புதிதாக எழுதி நூலின்முன் சேர்த்திருக் கின்றேன். எனக்குச் சந்தேகந் தோன்றிய இடங்களிலெல்லாம் அவற்றை வெ எனது ஆசிரியர் தக்கவாறு திருத்தியமைத்து, ஒவ்வொரு பாரத்தையும் திருத்திக்கொடுத்து உதவிசெய்தார் கள். வெ எனது ஆசிரியர் செய்த உதவிக்கு அவர்கள் பாத கமலங்களை மன மொழி மெய்களால் வந்திப்பதன்றி அடியேன் வேறியாது கைம்மாறு செய்யவல்லேன்? இந்நூல் அச்சிடுவதற் கன் வெ எனது நண்பரவர்களுக்கும் சரீர சிரமம் அதிகம் ஏற்பட்டது.

தமது தேக சிரமத்தையும் பொருட் செலவையும் பாராட் டாமல் இந்நூல் வெளியிட்டவர்க்கு நம் தமிழ் மக்கள் பலரும் சேர்ந்து இந்நூலை ஆதரிப்பதன்றி, மேன்மேலும் இம்மாதிரி விஷ யங்களில் ஊக்கம் உண்டாகுமாறும் செய்து வருதல்வேண்டும்.

எம்பெருமான் திருவருளால் இந்நூல் இனிது நிறைவேறி யதுபற்றித் திருவருளை மன மொழி மெய்களால் வந்தித்து

வாழ்த்துகின்றேன். இந்நூலிற் பிழையுளதேல் உலகம் பொறுக்க. சுபம்.

மஹாத்மா-சாது-ஸ்ரீ-சை. இரத்தின சற்குரு அவர்கள் திருவடி வாழ்க.

மஹான் சாது - கோ. வடிவேலு செட்டியாரவர்கள் திருவடி வாழ்க.

உலகில் தருமமும் சத்தியமும் தழைத்தோங்குக.
பிரஜைகள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்க.

[திருக்குறள்-அறத்துப்பால்-இல்லறவியல்-கo-அதிகாரம்-ஒழுக்க முடைமை-கo-குறள்]

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்."

பரி:—(இ-ள்) உலகத்தோடு பொருந்த வொழுகுதலைக், கல்லாதார் பல நூல்களையுங் கற்றாராயினும் அறிவிலாதார், எ-று.

* உயர்ந்தோரோடு பொருந்த நடத்தலாவது உயர்ந்தார் பலரும் நடந்தவழியாக நடத்தல். தருமசாஸ்திரம் கூறியவற்றுள், இக்காலத்திற்குப் பொருந்தாதனவற்றை விட்டு, கூறுதனவற்றுள் பொருந்துவனவற்றைக் கொண்டு வருதலால் அவையும் அடங்குவதற்கு 'உலகத்தோ டொட்ட' என்றும், கல்விக்குப் பயன் அறிவும் அறிவிற்குப் பயன் ஒழுக்கமும் ஆதலின் அவ் வொழுக்கத்தைக் கல்லார் பல கற்றும் அறிவிலாதார்' என்றும் சொல்லினர். ஒழுகுதலைக் கற்றலாவது பின்பற்றி நடத்தல்.

நெம் 3, மேட்டுத் தெரு,
ஜார்ஜ் டவுன்,
சென்னை: 5-6-1928.

இங்ஙனம்,
தாஸன்,
அ. மஹாதேவ செட்டி.

---

* இது சென்னை ஹிந்து தியலாஜிகல் உயர்தர கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்புலவரும், இலக்கண-இலக்கிய-தருக்க-வேதாந்த போதகாசிரியரும் ஆகிய மஹான்-சாது-கோ-வடிவேலுசெட்டியார் அவர்கள் இயற்றிய திருக்குறள் பரிமேலழகருரை - தெளிபொருள் விளக்கவுரை - கருத்துரை - குறிப்புரையுடனும், ஆங்கில மொழி பெயர்ப்புடனுங்கூடிய நிருத்தமான இரண்டாம்பதிப்பிலிருந்து எழுதப்பட்டது இந்நூல் உயர்ந்த ரிளைஸ் காகிதத்தில் பிழையறப் பரிசோதித்து அச்சிடப்பட்டு, இரண்டு வால்யமாகக் காலிகோ பயிண்டு செய்யப்பட்டுள்ளது விலை. ரூபா எட்டு (தபாற்கூலி வேறு.)

உ

கடவுள் துணை

விஷய அட்டவணை

செய்யுள் இலக்கம்	விஷயம்	பக்கம்
	முகவுரை	1-10
	விஷய அட்டவணை	11-14
	காப்பு	16
	நூல் வரலாறும் அவையடக்கமும்	,,
க	கடவுள் வாழ்த்து	க
உ	சபை அலங்காரம்	,,
ங	நீதியுத்தி	உ
ச	அரசர் திட்டஞ் செய்யு மியல்பு	ங
ஞ	அரசர் நஷ்டமுறு பொருளைக் காத்தளிக்கும் இயல்பு	,,
ட	அரசன் தானே விசாரணை செய்யத்தக்கவை இவை யெனல்	ச
எ	அரசன் வினவுபொழுது விவகாரஞ் சொல்லத் தக்கவர் இவர் எனல்	ஞ
அ	அரசன் அப்பொழுதே உத்தரங் கொடுக்கு மியல்பு	,,
ண	அரசன் சபையில் அழைக்கத்தக்கவர் இயல்பு	ட
ண	அனுபோகம் உறினும் அடையாது இதுவெனல்	எ
ண	ஆகமம் என்பதும், அனுபோகம் என்பதும்	,,
ண	நிலமுதலிய அனுபோக சாதனை	அ
ண	இவரைத் தகையலாகாது எனல்	ண
ண	இப்பொழுதில் தகையலாகாது எனல்	,,
ண	சான்றினுக்கு ஆகாதார் இவர் எனல்	ண
ண	இதுவும் அது	ண
ண	சான்றிற்கு உரியவர்	,,
ண	சான்றினர் சாதனை	ண
ண	சான்றினர்க்குவருமேன்மையும் இழிவும்அறிவித்தல்	ண
ண	சான்றினரை விலுவல்	,,
ண	சான்று உரைக்கு மியல்பு	ண
ண	பொய்ச்சான்று உரைப்பவர் கொடுக்குந் தண்டங்கள்	ண
ண	மறு விசாரணை செய்யு மியல்பு	,,
ண	சபதஞ் செய்யு மியல்பு	ண

செய்யுள் இலக்கம்	விஷயம்	பக்கம்
உஙி	இவ்வளவு பொருட்கு மேலாகில் இவ்விதத் திவ்வியம் எனல்	கள
உசு	இவர்க்கு இவ்விதத் திவ்வியம் ஆகாது எனல்	கள
உஎ	பிணைக்கு உரியரல்லார் இவர் எனல்	கஅ
உஅ	பிணைபட்டவர்க்குக் கொடுக்கு மியல்பு	கசு
உகூ	தலைவர் இயல்பு	,,
நடு	வட்டி வாங்கும் இயல்பு	உடு
நக	வட்டி யில்லாத விடயம்	உக
நஉ	புத்திரர்: பிதாவின் கடனைக் கொடுக்கு மியல்பு	,,
நங	புத்திரர்: பிதாவின் கடனைக் கொடாத இயல்பு	உஉ
நசு	பௌத்திரர்: பாட்டன் கடனைக் கொடுக்கு மியல்பு	உங
நஙி	இன்னர் பட்ட கடனை இன்னர் கொடுப்பது எனல்	,,
நசு	தலைவன் கடன் கொடுக்கும் இயல்பு	உசு
நள	கடன் வாங்கும் உபாயம்	உஙி
நஅ	இதுவும் அது	,,
நகூ	கடனைத் தீர்க்காதவர் அடையும் பாவம்	உசு
சடு	அடைக்கலப் பொருளைக் காத்தலால் வரும் பலனும், அபகரித்தலால் வரும் பாவமும்	உள
சக	மேற் சொல்லிய பொருளைக் கொடுக்கும் இயல்பு	,,
சஉ	மேற்கூறிய பொருளை அபகரித்தவன் கொடுக்கும் இயல்பு	உஅ
சஙி	சந்தேகப் பொருள்	உகூ
சச	உடனே வாங்கும் பொருள்	,,
சஙி	மாணைக்கன் இயல்பு	நடு
சசு	அணித்துறைவோன் இயல்பு	நக
சள	ஒப்பி வேலை செய்யாதவர் கொடுக்கின்றது	,,
சஅ	சுமைக்காரர் இயல்பு	நஉ
சகூ	ஒப்பின கூலிக்காரனை நீக்கியவன்கொடுக்கும் இயல்பு	நங
ஙடு	அடிமை யியல்பு	,,
ஙக	அடிமையை விலக்கும் இயல்பு	நசு
ஙஉ	கூடி மேம்படும் இயல்பு	,,
ஙங	கூட்டு வாணிகஞ் செய்யும் இயல்பு	நஙி
ஙச	கூட்டு வியாபாரஞ் செய்யும் இயல்பு	நசு

செய்யுள் இலக்கம்	விஷயம்	பக்கம்
நந	பொருள் உதவும் இயல்பு	,,
நசு	எல்லை அடையாளம்	நள
நன	எல்லை வழக்குத் தீர்ப்பு	நஅ
நஅ	மனைவியின் செய்கை	,,
நக	மாதர்க்குச் செய்யும் இயல்பு	நக
சுo	கணவனைத் பகைத்த மனைவிக்குச் செய்யும் இயல்பு	சo
சுக	கற்புநிலை தவறின மனைவியர்க்குச் செய்யும் இயல்பு	,,
சுஉ	இவ்வித மனைவியரை ஒழித்து மறுமணம் புரிவது எனல்	சக
சுங	இவ்வித மனைவியர் இருக்க மறுமணம் புரிவதுஎனல்	சஉ
சுச	மனைவியர்க்குத் தகாத இயல்பு	,,
சுஞ	கற்புடையவள் இயல்பு	சங
சுசு	கணவனும் மனைவியும் ஒத்திருத்தலால் வரும்பேறு	சசு
சுள	புருடனை விரோதிக்கின்ற மனைவி யடையும் பாவ இயல்பு	,,
சுஅ	இல்லறம் வழுவின பிதாவையன்றிப் புத்திரர் பங்கிடும் இயல்பு	சஞ
சுக	இல்லறத் தலைவர் அதிகார முறைமை	சசு
எo	பிதா மனதின்படி பங்கிடும் வகை	,,
எக	பிதாவுக்குப் பின்பு மைந்தர் பங்கிடும் வகை	சள
எஉ	தாய் பாகத்திற்கு உரியர் அல்லாதவர் இவர் எனல்	சஅ
எங	தாய் பாகம் பெறுதார் இயல்பு	,,
எச	பிரிக்கத் தக்க பொருள்	சக
எஞ	பிரிக்கத் தகாத பொருள்	ஞo
எசு	அதிக பங்கு பெறும் இயல்பு	,,
எள	புத்திரர் பௌத்திரர் முதலிஞோர் பங்கு எற்பாடு	ஞக
எஅ	ஈனச் செய்கை	ஞஉ
எக	,, ,,	;;
அo	தத்த புத்திரன் பங்கு எற்பாடும், விபத்தனது பொருள் விடயமும்	ஞங
அக	விபத்தன் மனைவி செய்யும் இயல்பு	ஞச
அஉ	அவிபத்தனது மனைவிக்குச் செய்யும் இயல்பு	,,
அங	விபத்தன் பொருளைக் கொள்ளு முறைமை	ஞஞ

செய்யுள் இலக்கம்	விடயம்	பக்கம்
அ சு	,, ,, ,, ,,	(ந) சுர
அ நு	,, ,, ,, ,,	,,
அ சூ	பிரிவுக்கு மேற் பிறந்த மைந்தர் விடயம்	நுள
அ எ	பிரிவுக்குமேற் பிறந்தோர் வர்தோர் பங்கிடும்இயல்பு	நு அ
அ அ	மாடு மேய்ந்த நஷ்ட இயல்பு	நு அ
அ கூ	சரக்கு இலாப இயல்பு	நு கூ
கூ ○	இராஜ விரோதிகளைத் தண்டிக்கும் இயல்பு	சூ ○
கூ க	அந்தணரும் வைசியரும் ஆயுதம் எடுக்கும் இயல்பு	,,
கூ உ	இவர்களைக் கொன்றால் குற்றம் இல்லை எனல்	சூ க
கூ ங	திருடரைத் தண்டிக்கும் இயல்பு	சூ உ
கூ ச	,, ,, ,,	,,
கூ ஞ	கொலை களவு செய்த மிவதியினைத் தண்டிக்கும் இயல்பு	சூ ங
கூ சு	ஒவ்வாத மாதரது கற்பழித்தவரைத் தண்டிக்கும் இயல்பு	சூ ச
கூ எ	ஒப்பிக் கற்பழிந்தவளையும் அழித்தவனையுந் தண்டிக்கும் இயல்பு	சூ (ந)
கூ அ	வைதவரைத் தண்டிக்கும் இயல்பு	,,
கூ கூ	அடித்தவரைத் தண்டிக்கும் இயல்பு	சூ ஞ
க ○ ○	நஷ்டமும் தண்டமும் வாங்கும் இயல்பு	சூ எ

உ

கடவுள் துணை

மதுரைத் தலபுராணம்

காப்பு

நாதன் பழமலிவாழ் நம்பன்றன் மீதுமது
ரீதி சதக நிகழ்த்தவே—டீதலர்க்குக்
கந்தணுக்குக் கைக்கயமுங் கற்பகமு நிற்கவருட்
கந்தணுக்கு முன்னவனே காப்பு.

[நூல் வரலாறும், அவையடக்கமும்]

பரு,பிதா (மகன்),நாத தன், தேவ லன்கௌத
மன்,சங்க ரிதன்,விபாசன்,
மரிசி,பிர கற்பதி, வசிட்டன்,அத் திரி,பாஞ்ச
லற்கியன், புருகு,போதா

யுகன்,இடமன், விட்டுணு, தாரேசு ரன்,காத்தி
யாயனன், நாதன்பற்(று)

அரிபட ழுநிவரிவர் தங்கள்தங் கட்பெரி
ஞற்செய்த தருமநூலில்

இனிமைதரும் ஆசார விவகார ப்ராயச்சித்தம்
என்னு(ம்)மூக் காண்டத்தினில்
எழிலான விவகார காண்டத்தி லெலிசில
எடுத்(து),இயற் றமிழினாலே

மநுநீதி சதகமென்(று) அருள்வழிவ மானபழு
மலைநாதர் போற்பாடியென்
மதியிலா மையைவெளிச் செடுத்தனன்; கவிஞர்கள்
மனம்பொறுத்(து) அருள்புரிவீர.

ஓம்

கடவுள் துணை

மதுரைக் காஞ்சி

[க. கடவுள் வாழ்த்து]

தூமேவு மிந்திரை விளங்குமணி மார்பனும்
புண்டரீகப் பொகுட்டில்
போதனும்- பொன்னுலக நாதனும்- தேவரும்
புகழான நிலைபெற்றதும்,
தேமேவு மலர்வாளி யெய்ப்தமன் மதனைச்
சினந்துமிர தியின்மங்கலக்
திகழ்வுற நிலைத்ததும், சநகன்மூத லாகிநீர்
சித்தமிகு தெளிவானதும்,
மாமேவும் ஆகம புராணங்ின தருளொளப்
பகருமொரு பொருளறிந்தும்
பாசமய நெறிபுகுந்(து) இதமகிழ் வார்க்கென்ன
பான்மைமேயா அளைபறிகிலேன்;
மாமேவு கொன்றைபுனை செஞ்சடா டவிபோன!
மகிபன்மூத் தைதபமதீவள்
மனதிலனு தினமும்(ம்)நின தருஞ்இடைய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[உ. சபை அலங்காரம்]

உலகுபுகழ் குரு-பூரோ கிதர்-பூபா ணிகர்-கவிஞர்-
உணருமந் திரியர்-தூதர்-
உற்றநட் பாளர்-நிலை யார்-ஒற்றர்- தளகர்த்தர்-
உயர்மருத் துவர்கள்சூழ,

மநுநீதி சதகம்

அலகின்மநு நூற்பொருள் நூலறிந்(து), அறிவு-கொடை-
அஞ்சாமை-ஊக்கமுண்டாய்,
அச்சமொடு- பகை-அழுக் கா(று)-அவா வெகுளியும்
அகற்றி,ஆ யெம் விளங்கச்,
சலசரம் உலாவுவய ணுடுகள் செழித்திடத்
தருமா சனத்திருந்து
தகைமைபெறு செங்கோல் நடாத்திவரும் அரசரது
சபையலங் காரமென்பார்;
மலர்வதன சுகிர்தகுண லிங்கபூ பதிபெற்ற
மகிபன்முத் தையமதவேள்
மனதிலணு தினமும்(ம்)நினை தரும்இமய மலைவணிதை
மருவுபழ மலைநாதனே!

[h. நீதியுத்தி]

வந்துவிவ காரம் புகன்றிடுவர் முகவடிவு
மாறல்,வாய் வசனமாறல்,
மயிர்சிலிர்த் திடுதல், கீழ்ப் பார்வைநுதல் வெயர்வெழுதல்
மனதச்ச மலதியற்கை
நிந்தையுள னல்லன்என நிச்சயஞ் செய்வதுவும்;
நியமசான் றினர்இலாமல்
ஈரராக வந்தொருவன் "எனையடித் தான்"என்று
நின்றுடற் புண்காட்டினால்,
நிந்தையன மானித்து முன்(பு)இருவர் சேர்ந்ததும்
சேர்ந்துசெய் வினையுமோர்ந்து,
செப்புமொழி நிசமென்று நிசிதமென் றுங்கண்டு
தீர்ப்பதுவு(ம்) நீதியுத்தி;
மந்தர நெடுங்கிரி வளைத்தகெம் பீரனே!
மகிமன்முத் தையமதவேள்

மனதிலனு தினமு(ம்) நினை தரும்இமய மலைவனினைத
மருவுபழ மலைநாதனே!

[ச. அரசர் திட்டஞ் செய்ய மியல்பு]

வேதமுணர் வேதியர் தமக்குமா னியநிலம்
விடுத்தூநித் தியகிர்த்தியம்
விலகாமல் அனுதினமும் விரதங்கள் முதலான
வேள்விபுரி கவு(ம்), மற்றுளோர்
சாதிமுறை வழுவாமல் அவரவர் விருத்திபைச்
சார்ந்தநிய மம்புரிந்து,
தக்கதே வாலயம் வாவிநீர்க் காவணத்
தருமங்கள் மிகசெலுத்தித்,
தீதடுரி கள்ளர்மிரு கம்புகுவ தஞையகற்
றிடமஞைக டோறுநிதமும்
திறமான ஒவ்வொருவர் ஆயுதத் தொடுவந்து
சேர்ந்தோ ரிடத்துறைகவும்
மாதபவி னெடுவேந்தர் திட்டமது செயல்வேண்டு(ம்);
மகிபன்முத் தையமதவேள்
மனதிலனு தினமு(ம்)நினை தரும்இமய மலைமனினை
மருவுபழ மலைநாதனே!

[ஞ. அரசர், நஷ்டமுறு டொருளைக் காத்தளிக்கும் இயல்பு]

சபர்டிலா தவள்,குலத் தாரிலாள், கற்புடைய
தையலாள், மைந்தனில்லாள்,
தக்கஇள மையனிவர்கள் தமதுபொருள் காக்குமொரு
தகைமையில் லாரெனினைதைச்

அலகின்மநு நூற்பொருள் நூலறிந்(து), அறிவு-கொடை-
அஞ்சாமை-உளக்கமுண்டாய்,
அச்சமொடு- பகை-அழுக் கா(று)-அவா வெகுளியும்
அகற்றி,ஆ லயம் விளங்கச்,
சலசரம் உலாவுவய ணுடுகள் செழித்திடத்
தருமா சனத்திருந்து
தகைமைபெறு செங்கோல் நடாத்திவரும் அரசரது
சபையலங் காரமென்பார்;
மலர்வதன சுகிர்தகுண லிங்கபூ பதிபெற்ற
மகிபன்முத் தையமதவேள்
மனதிலணு தினமு(ம்)நினை தரும்இமய மலைவணிதை
மருவுபழ மலைநாதனே!

[h. நீதியுத்தி]

வந்துவிவ காரம் புகன்றிடுவர் முகவடிவு
மாறல்,வாய் வசனமாறல்,
மயிர்சிலிர்த் திடுதல், கீழ்ப் பார்வைநுதல் வெயர்வெழுதல்
மனதச்ச மலதியற்கை
நிந்தையுள னல்லன்என நிச்சயஞ் செய்வதுவும்;
நியமசான் றினர்இலாமல்
நேராக வந்தொருவன் "எனையடித் தான்"என்று
நின்றுடற் புண்காட்டினால்,
சிந்தையனு மானித்து முன்(பு)இருவர் சேர்ந்தறிதம்
சேர்ந்துசெய் வினையுமோர்ந்து,
செப்புமொழி நிசமென்று நிசிதமென் றுங்கண்டு
தீர்ப்பதுவு(ம்) நீதியுத்தி;
மந்தர நெடுங்கிரி வளைத்தகெம் பீரனே!
மகிமன்முத் தையமதவேள்

மனதிலனு தினமும்(ம்) நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[ச. அரசர் திட்டஞ் செய்யு மியல்பு]

வேதமுணர் வேதியர் தமக்குமா னியநிலம்
விடுத்துநித் தியகிர்த்தியம்
விலகாமல் அனுதினமும் விரதங்கள் முதலான
வேள்விபுரி கவு(ம்), மற்றுளோர்
சாதிமுறை வழுவாமல் அவரவர் விருத்தியைச்
சார்ந்தநிய மம்புரிந்து,
தக்கதே வாலயம் வாவிநீர்க் காவணத்
தருமங்கள் மிகசெலுத்தித்,
தீதுபுரி கள்ளர்மிரு கம்புகுவ தனையகற்
றிடமனைக டோறுறைதலும்
திறமான ஒவ்வொருவர் ஆயுதத் தொடுவந்து
சேர்ந்தோ ரிடத்துறைகவும்
மாதவியி னெடுவேந்தர் திட்டமது செயல்வேண்டு(ம்);
மகிபன்முத் தையமதவேள்
மனதிலனு தினமும்(ம்)நினை தரும்இமய மலைமனிதை
மருவுபழ மலைநாதனே!

[ஞ. அரசர், நஷ்டமுறு பொருளைக் காத்தளிக்கும் இயல்பு]

சபரிலா தவள்,குலத் தாரிலாள், கற்புடைய
தையலாள், மைந்தனில்லாள்,
தக்கஇள மையனிவர்கள் தமதுபொருள் காக்குமொரு
தகைமையில் லாரெனினைதச்

சீருடன் காத்தருள்வ தும்,கிளைஞர் முதலினோர்
சேர்ந்தப கரிக்கின் அவரைத்
திருடரைப் போலவே தண்டிப்ப துந்தகும்;
திருடர்:எவர் பொருளேயெனுஞ்
சோர்வுசெயி னதனைப் பிடித்தருள விலையெனில்,
துன்னுதன் பொருளிலேஅச்
சோர்வான பொருளினுக்(கு) ஈடளிப் பதுதகும்
தூயஅர சர்க்கென்பர்காண்;
வார்தரு மதுக்கொன்றை யணிகின்ற சடிலனே!
மகிபன்முத் தையமதவேள்
மனதில்அனு தினமு(ம்) நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[கூ. அரசன் தானே விசாரணை செய்யத்தக்கவை இவை யெனல்]

அபலவ னுடைமஹிளை யைச்சேர்தல், கொலைசெய்தல்,
அரசன்ஆ ணையைநீக்குதல்,
அனலிடுதல், வருணங் கலத்தல்,ஏ லாதமொழி
அறைதல்,வழி யைக்கெடுத்தல்,
பயிரழித் திடல்,இறைப் பொருளினுக்(கு) இடையூறு
பண்ணல்,சூ னியமழித்தல்,
பார்மன்னன் உட்கருத் தினைவெளிப் படமொழிதல்,
படைகொண்(டு) அடித்தல்,திருடல்,
இபதுமிவை போலுமெத் தனையேனுஞ் செய்தவரை
எழிலான வேந்தராணைர்:
எதிராக வருவித்து மிகவிசா ரணைசெய்தல்
ஏற்றகா ரியமென்பர்காண்;

வயல்கொண்ட செந்நெல்வீள மங்கைநகர் தன்னில்வளர்
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அனு தினமும்(ம்) நினை தரும்இமய மலைவணிதை
மருவுபழ மலைநாதனே!

[எ. அரசன் வினவுபொழுது விவகாரஞ் சொல்லக் தக்கவர் இவர்எனல்]

இறையவன் சபைதனி லிருந்துவந் துப்பணிந்(து)
எதிர்நிற்கு மவரைநோக்கி:
"யாவனுல் எவ்விடத்(து) எப்பொழுதில் எதிலுல்
ஏற்படு விவாதமதுநீ
உறுதியுடன் அஞ்சாது சொல்"என்று வினவுபொழு(து)
உற்றகா ரியமுடையரே
உரைசெய்க வேண்டுமென நியமமதிலை அவர்தமக்(கு)
ஒத்துநிய மித்தமிகவுந்
திறமுடைய தங்கை,தமை யன்தம்பி, நண்பினன்
சேர்கிளைஞர் இவருத்தரஞ்
செப்புதற்(கு) ஆகும்,எதிர் வாதிக்கும் இஃதென்று
தேர்ந்தமுநி வோர்மொழிவர்காண்;
மறையவன் சருதியாற் புகழ்கின்ற தேவனே!
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அனு தினமும்(ம்) நினை தரும்இமய மலைவணிதை
மருவுபழ மலைநாதனே!

[அ. அரசன் அப்பொழுதே உத்தரவு கொடுக்கு மியல்பு]

பொன்,பூமி, அரிவை,கற வைப்பசு, எருது,கொடுமை
பொருள்வைப்பு, பெருமையழிவு,

பொய்ச்சான் றுரைத்தல்,மா தர்கள்நிந்தை, கொளல்,விற்
புறநீக்கல், பாவியென்றல், [றல்,
வன்செய்கை, கலகம், திருட்(டு),அச்ச முதலான
வைகளால் ஒப்புக்கொளல்,
வசனித்து வந்தஇப் பதினெட்டு வகையிலுல்
வருவிவா தந்தனக்குப்
பின்னென்று சொல்லாமல் அப்பொழுது தீதியொடு
பேசியுத் தரமளித்தல்
பெருமைபெறு வேந்தருக்(கு) அழுகென்று முறிவோர்கள்
பேசுமொழி நிலைமையன்றே?
பன்னவர்கள் புகழ்கின்ற குணமுற்ற கெம்பீர
மகிபன்முத் தையமதவேள்
மனதில்அனு தினமு(ம்)நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே !

[கூ. அரசன் சபையில் அழைக்கத்தக்கவர் இயல்பு]

உன்மத்தன், நோயினன், முதியன்,மத் தன்,துக்கம்
உடையவன், மாதர்இவர்கள்
உரைசெய்யும் எதிர்வாதி யாகின்மன் னவர்சபையில்
உறுதல் தகுந்தகாதும்
உன்னிவரு விக்கவேண் டும்;வலிமை யாளனை
யுகந்தழைக் கும்போ(து)அவன்
முன்னலர்க ளால், அழலி னல்,திருட ராற்மன
முடைந்(து)அழைப் பதைமறுக்கின்,
அன்னதற் குத்தண்ட மில்லை; செருக்குற்(று)
அழைப்பதை மறுக்கின்பணம்
ஐம்பத்து நூறும்,ஐந் நூறும்இவை தக்கபடி
அமையுமே தண்டமென்று

மன்னுபுகழ் கொண்டமநு வோர்களுரை செய்வர்காண்;
மகிபன்முத் தையமதிதேவள்
மனதில்அது தினமும்(ம்)நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[கo. அனுபோகம் உறினும் அடையாது இதுவெனல்]

"மகிபதி யொருவனுடை வூர்கள்முதல் விளைபூமி
மற்றொருவ னுக்குமுனிவால்
வஞ்சத்தி னுலளித் ததும், இரவ லாகவே
வாங்கினதும், ஒருவன்' இன்னர்
அகமனித் திடும்'என்று மற்றொருவர் கைதனில்
அளித்தபொரு ளதும், உடையவன்
அறியாமல் அனுபோகஞ் செய்வதும், காப்பதற்
காகக்கொ டுத்தஅதி லும்,
தகுதியில் லாமற் கவர்ந்ததும், துட்டனல்
தந்ததும், அனேககாலம்
தான்மிக்க அனுபோகஞ் செய்கினும் செய்தவர்கள்
தம்மையடை யா(து), உடையரே
மகிழ்வினெதி பெறுவர்" என நாரத ருரைப்பர்காண்;
மகிபன்முத் தையமதிதேவள்
மனதில்அது தினமும்(ம்)நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[கக. ஆகமம் என்பதும், அனுபோகம் என்பதும்]

"தனையரில் லாததா யாதல்முத லாகினோர்
தங்களால், சௌரியத்தால்,
தானத்தி னல், தந்தை யால், கண் டெடுப்பதால்,
தக்கதிர யத்தால், வரு

மனவியா(ல்) அடைவ(து)ஆ கமமாகுர்; இவ்வாக
மத்தேதாடு கூடியதுவும்,
மத்தியில் விடாதது நெடுங்கால முடையது(ம்),
மறுக்குமொழி யில்லாததும்,
முனிவுதரும் எதிர்வாதி யர்க்(கு)எதி ரமைந்ததும்
மொய்த்தஅநு போகமாகும்;
முப்பதாண் டுடையது நெடுங்காலம் ஆகும்''என
மொழிவர்மா முநிவர்கண்டாய்;
மனைதொறு நிதஞ்சுட முழக்கமுறு மங்கைநகர்
மகிபன்முத் தையமதவேள்
மனதில்அது தினமு(ம்)நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[கஉ. நிலமுதலிய அநுபோக சோதனை]

“ஆற்றலுறு நிலமுதலி யவைகளின் விவாதத்தில்
ஆண்டுநூற் றைறந்துக்குமேல்
ஆனஅது போகமெனில் ஆகமம் விரும்டாமல்
அநுபோக மேபொரியதாம்;
தோற்றுமது போகத்தின் அங்கம்வே றுகிலுஞ்
சொன்னஅவ் வாண்டிலுக்குள்
தொடர்வான வநுபோக மாகிலுஞ் சந்தேதகஞ்
தோன்றுபொழு(து) ஆகமத்தைச்
சாற்றுநற் சான்றினர்க ளால்,அல்ல(து) எழுதுலிகி
தத்திலுல் உணர்தல்வேண்டும்;
தகுமாக மம்மேவர்கள் அநுபோக மேலெலாங்
தாவுகிளை” என்பர்முநிவோர்;
மாற்றரிய வரமுதவு கின்றவொரு வள்ளலே!
மகிபன்முத் தையமதவேள்

மனதில்அணு தினமும்(ம்)நினை தரும்இடைய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[ஈக. இவரைத் தகையலாகாது எனல்]

வாதிதன் றற்சொலைத் தக்கா ரிடமதனை
மனமுறு(து) எகியனதிர்
வாதிதனை வேந்தன்ஆ ணையிலைல் தடுப்பதனில்
மந்தர்,உன் மந்தர்,மூதியோர்,
தூதர்,உழ வோர்,மூடர், அயலவன் றன்னைற்
சுமத்துவிவ காரம்உற்றோர்,
துக்கமுற் றோர்,"கண்ட வுடன்வருகு வேன்"எனச்
சூள்உரைத் தோர்,துறந்தோர்,
தீதுசெயு நோயால் வருந்துவோர், அரசனது
செய்கைதனி லேயிருந்தோர்,
சிறுவர்பண் ணியம்விற்கும் அப்பொழுதில், வணிகர்,இத்
திறவரைத் தகையலாகா;
வாதுபுரி காளியுடன் ஆடுநற் பாதனே!
மகிபன்முத் தையமதவேள்
மனதில்அணு தினமும்(ம்)நினை தரும்இடைய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[கச. இப்பொழுதில் தகையலாகாது எனல்]

"வெள்ளங் கடக்கின்ற பொழுதும்,வெஞ் சமரிடை
மெலிந்தபொழு தும்,திருடரும்
மிருகமும் மிகுந்தவனம் அடைலை பொழுதும்,ஒரு
வேள்விபுரி கின்றபொழுதும்,
கள்ளர்-கனல் இவைபால் நலிந்தேதரு பொழுதும்,
கடிபடைபோர் புரிபொழுதினும்,

கடிமணம் புரிகின்ற பொழுதும், ஓர் ஆலயங்
கருதிய கும்பொழுதினும்,
விள் அரிய நீர்கொண்டு வரமுயன் றிடுபொழுதும்,
விதைவிதைக் கின்றபொழுதும்,
விரதமுற் றிடுபொழுதும், ஒருவரைத் தகையாது
விடல்வேண்டும்,'' என்பர்கண்டாய்;
மள்ளர்உழு கொழுமுனையில் மணிசிதறு மங்கைநகர்
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அனு தினமு(ம்)நினை தரும்இமய மலைவணிகை
மருவுபழ மலைநாதனே!

[கடு. சான்றினுக்கு ஆகாதார் இவர் எனல்]

உரைசெய்வி வாரியர்க்(கு) உரியஅனு கூலனே(டு)
உறவினன், பிணையன், அடிமை,
உபதேச குரு,விவா தப்பொருட்(கு) உடையவன்
ஒருபட்சர் இவராதலால்;
எரியிடு பவன்,சினத் தன்,பதிதன், உறுகோள்
இயம்புவோன், விடமளிப்போன்,
இசைபாக் கொடுந்தொழில் செய்பவன், தந்தைதா
னிடத்தினில் வழக்காடுவோன்,
கருதலி டத்திலுறை வோனிசதர் இவர்அதி
கடுங்கொடுமை யாளர்அதனல்
கழறும்இவர் தமைமெலாஞ் சாட்சியென் றேமிகக்
கருதார் தெளிந்தமிக்கோர்;
மருவுலா வியதும்பை மாலைபணி லோலனே!
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அனு தினமு(ம்)நினை தரும்இமய மலைவணிகை
மருவுபழ மலைநாதனே!

[கசு. இதுவும் அது]

பணிசெயும் புலவர்முத லானசிற் பியர்,புகழ்வர்,
பாடுவோர், தம்மனைவியைப்
பலர்பால் விடுத்(து) அதிற் சீவனஞ் செய்குவோர்,
பால்-புலால்- சிற்றுண்டி-நெய்-
உணவு-மது விற்கின்ற பேர்,கூத்தர், வட்டிபால்
உய்பவர்கள்: இவர்பொருளின்மேல்
உயர்(வு)ஆசை யுடையாத னுலும்; தரித்திரர்கள்,
ஓயாது நடையுற்றவர்,
பிணியர், அதி விரகர்,மது வுண்டோர், மயங்குவோர்,
பெண்காணர், நிலைமைஅற்றோர்,
பேசும்இவர் மதியீனர் அதனுலும், இவர்களைப்
பிரியமொடு சான்றியம்பார்;
மணிதிகழு மலையில்வரு விடம்உண்ட கண்டனே!
மகிபன்முத் தையமதி வேள்
மனதில்அனு தினமூ(ம்)நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[கள. சான்றிற்கு உரியவர்]

"தொழில்பொருள் பழிப்பின்மை, அறமோர்தல், நற்குலம்,
தூய்மைஇல் லறஇயற்கை,
சுதருண்டனை, அறிவுடமை வசமின்மை, உண்மைமொழி
சொலுதல்,நன் னெறியொழுகுதல்,
வருவில்குண மிலையுடைய பேர்முதலர் முதலாக
வாய்ந்துபதி னெருவர்வகையும்
வண்மையுறு சான்றினுக்(கு) உரியவர் வார்இவர்கள்
வையகம் இடந்திலாதப்

பொழுதுவன் செய்கை-தண் டக்கொடுமை- கடன்முதற்
பொருள்விடயம் இவைநோர்ந்திடின்
பொருவிலா எவன்ரையுஞ் சான்(று)எனக் கொள்ளல்
பொருந்தும்''என் பார்முனிவர்காண்;
மழுவிணெடி மான்ஏந்து கையனே! தெய்யனே!
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அணு தினமு(ம்)நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[கஅ. சான்றினர் சோதனை]

''நெற்றியில் வியர்த்தலும், கடைவாயை நக்கலு(ம்),
நின்றஇட நில்லாமலும்,
நோனான முகவடிவு மாறலும், காலால்
நிலங்கீற லும், சரீரம்
முற்றுமே உதறலும், அடித்தடித் துப்பெரு
மூச்செறித லும், பூமியில்
முகம்வளைத் திடலும், உத டிணமெல்ல லும், பேச
மொழிமாற லும், வேறொரு
குற்றம்இலர் போலவும் காரணம் இலாமலே
கூப்பிடலும், இவைகள்போ லும்
கொண்டசான் றினைரையோ சனைசெய்து, வஞ்சனேற்
கொள்ளாது விடுக''என்பார்;
''பற்றினை விடேன்''என்ன அருள்புரியும் வள்ளலே!
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அணு தினமு(ம்)நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[கஉ. சான்றினர் வரு மேன்மையும் இழிடும் அறிவித்தல்]

"உண்மையது சொல்பவன்: புவிமீது சம்பத்தும்,
உயர்தான மும்,தருமமும்,
உற்றதவ முஞ்செய்த பலனுமுடை யவனாகி,
உலகத்தி லுள்ளோரெலாம்
'திண்மைஉறு தெய்வவடி வினன்'என்ன, மறுமையில்
திவ்யகதி யும்பெறுகுவன்;
தீமைஉறு பொய்ச்சான்(று) உரைப்பவன்: பிரமவதை-
சிசுவதைசெய் திடுபாவமும்,
நண்ணினெழு பிறவியிற் செய்தபுண் ணியமெலா(ம்)
காசமுற்(று), எழுமரபொடு
நரகத் தழுந்தி,மறு பிறவியிற் பன்றியா(ய்)
நாயாய்ப் பிறப்பன்" என்றே
வண்மையொடு சான்றினர்க்(கு) அறிவித்த லதுவேண்டு(ம்);
மகிபன்முத் தையமதிதேவன்
மனதில்அணு தினமு(ம்)நினை தரும்இமய மலைவணனைத
மருவுபழ மலைநாதனே!

[உ0. சான்றினரை வினவல்]

சான்(று)உரைக் கின்றவே தியரை: "நீ பொய்சொலின்
சத்திபத் தால்உனக்குத்
தக்கபுண் ணியம்அழியும்" என்றாய்,ஒரு சட்திரியர்
தமை:"நீபொய் சொலின்உனக்கு
மேன்மைதரு வாகனமும் ஆயுதமும் உதவாது
விடும்"என்றாம்; வைசியர்தமை,
"மேவிநீ பொய்சொலின் உமக்குவரு திரவியமும்
விதையமும்,ஆ டும்,பயிர்ப்புத்

தோன்றுமல் அழியும்" என்றும்; சூத்திரை:="பொய்
சொலின், =நீ உனக்குமித்திரத்
துரோகமும், கொலைபாவ மும் வரும்" என்றுமுன்
சொல்லி "மெய் சொல்!" என்பர்காண்;
மான்மழு சூலம்உறு கையனே! மெய்யனே!
மகிமன்முத் தையமதிவேள்
மன்தில்அனு தினமு(ம்)நினை தரும்இடைய மலைவனினைத
மருவுபழ மலைநாதனே!

[உக. சான்று உரைக்கு மியல்பு

தலையின் சரத்தையும் காலிலணி காப்பையும்
தள்ளியுத் தரிகம்உபவீ
தம்போ லணிந்து, கிழக்குமுக மேனும்உத்
தரவதன மேனு(ம்) நின்றேற
இலகுபொன் கோடைய நாணலிவை கையினில்
எடுத்துயிர்க் கொலைதனக்கே
ஈச்சுரன் சந்நிதியி லேனு(ம்), அந் தணர்சபையி
லேனுமறை விடையங்களுரைக்(கு)
உலகுபுகழ் மன்னன்உறை சபையினில் தான்கண்ட
உண்மையைச் சொல்ல(து) அல்லால்
உணர்வுடன் பொய்ச்சான்(று) உரைப்பவர்க் குப்பாவம்
உறைபோது நீங்கிவிடுமோ?
மலைபழனி புகழ்ந்தின்ற விடைமுண்ட கண்டனே!
மதிடன்முத் தையமதிவேள்
மனதில்அனு தினமு(ம்)நினை தரும்இடைய மலைவனினைத
மருவுபழ மலைநாதனே!

[உஉ. பொய்ச்சான்று உரைப்பவர் கொடுக்குந் தண்டங்கள்]

"நியமஞ்செ யாமல், அழை யாமல், வின வாமலே
நேர்வந்து சான்றுரைப்போர்:
நிந்தையொடு பாவமுற் றப்பொருள் தண்டமும்
கோர்குவார்; பொய்ச்சாட்சியை
கயமுற்ற பொருளாசை அச்சமட் பிணையினல்
கவிலுவோர்: பணமாயிரம்;
காரியர்கள் மீ(து) ஆசை யாலுரைப் பவர்:பணம்
காடுமா யிரம்;முனிவினல்
தபவின்றி மொழிகுவோர்: எழுநூற் றைம்பதும்;
சார்ந்திடு மயக்கத்தினல்
சாற்றுவோர்: இருநூறு பணமுமே தண்டங்கள்
தருவார்கள்" என்றுமிக்க
மயலகன் றிடுகாத்தி யாயனன் உரைத்தனன்;
மகிபன்முத் தையமதவேள்
மனதில்அது தினமும்நிய தரும்இமய மலைவனிதை
மருவுபழு மலைநாதனே!

[உக. மறு விசாரணை செய்யு மியல்பு]

இரவினும், நகர்க்குவெளி யினும்,ஒன்ன லாரிடத்
தினும்,இல்லி னுள்ளும், மாதர்
இடத்தினும், மிகுரகசி யத்தினும், நிச்சய
மியம்புவில காரத்தினும்;
பொருளாசை, பகை,வயிமை பிணையினல் நிச்சயம்
புரியும்வில காரத்தினும்,
புத்தியிழி வொடுபட்ச பாதமுண் டாமிவையும்
புகழ்மேவு தானமின்றிப்

பாணிய குலக்குழுவி னோர்கள்முத லானதீழ்ப்
படியான தானத்துளோர்
பண்ணுநிச் சயநன்மை யாகவே காணப்ப
டாததோ(து) இவையுமறுகால்
முரபான மேன்மையர் விசாரணைசெய் திடல்வேண்டு(ம்);
மகிபன்முத் தையமதவேள்
மனதில்அனு தினமு(ம்)நின தருமஇய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[உச. சபதஞ் செய்யு மியல்பு]

இருபத்து குன்றியிடை கொண்டபொன் னெருநிட்கம்
இதனிலொன் றுக்குள்ளுமோர்
எட்டுமா மீதும்உறு விடயத்தில் அந்தணர்:
இயம்புமோர் உண்மைமொழியால்
வருபுண்ணி யந்தம்மை யடையாது விடுகென
வசனித்தல்; சட்திரியர்:தம்
வாகனமும் ஆயுதமும் உதவா(து) எனச்சொல்லல்;
வைசியர்:"பசு, விதை,பொன்இவை
பெருகா(து)" எனச்சொலல்; சூத்திரர்: கலப்பையாற்
போர்க்குமோ டெள்ளு வெள்ளரிப்
பிறங்குபொன் அறு(கு)இவையி லொன்றேறந்தி:எல்லாப்
பெரும்பாத கங்கள்தம்மை
மருவன மொழிதல்சப தங்கள்என மொழிகுவார்;
மகிபன்முத் தையமதவேள்
மனதில்அனு தினமு(ம்)நின தருமஇய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[உரு. இவ்வளவு பொருட்கு மேலாகின் இவ்விதத் திவ்வியம் எனல்]

உத்தமர்க்(கு) ஐம்படை நிட்கமேல் விடதிவ்யம்;
ஒருமுப்ப தேழரையின்மேல்
உற்றஅக் கினிதிவ்ய(ம்); முப்பத்து மூன்றின்மேல்
உதகதிவ் விய(ம்); இருபதோ(டு)
ஒத்தவைந் தின்மேல் துலாதிவ்யம்; ஐந்நான்கின்
உயர்ந்தத்த மாடதிவ்யம்;
ஒருபதின் மூன்றுக்கு மீதுதண் டலதிவ்யம்;
ஒத்தள ழரையின்மீது
தத்திவரின் நற்கோச திவ்யம்; ஐந்தின்மீது
தருமசதி வியநான்கின்மேல்
சார்ந்தபசு வுக்குநற் பாலதிவ் டம்; தகும்
சாற்றுதொகை யிற்டாதிமேல்
மத்திமர் தமக்(கு), அதிற் பாதிஅத மர்க்கென்பர்;
மகிடன்மூத் தையமதமேல்
மனதில்அஞ் தினமூ(ம்)நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[உரு. இவர்க்கு இவ்விதத் திவ்வியம் ஆகாது எனல்]

மறையவர்கள், விஷ்வயித் தியர்இவர்க் கோர்விடமும்;
வன்குருடர், செவிடர்,பேடர்,
வலியிலர், விருத்தர், ஆடி டபடர், பிணியர்,சிறுவர்,
மாதிவர் நமக்குவிடமும்;
நிறைசலமும் அனலுஞ் சுவர்சபந் தனர்,நிதமு(ம்)
நீரிலுழல் வோரிவர்க்கு(ம்),
நீருமனு வர்க்கனலு மிகுபாவர், பரலோக
நிலையில்லை யென்பரிவருக்

கறைகின்ற கோசதிவ் வியபினைவயு மிருகாற்(று)
அடிக்கும்வே ளாத்துலாமும்
அம்மழை பெயுங்காலும் விடமும்வே னிற்கால(ம்)
அக்கினியு(ம்) நளிர்காலமே
மறிதிரைப் புனலுமித் திவ்வியமு(ம்) ஆகாது;
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அனு தினமு(ம்)நினை தரும்இடைய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[உ எ. பிணைக்கு உரியவல்லார் இவர் எனல்]

"தலைவனுக்(கு) உள்ளான மேர்,பகைவர், சன்யாசி,
தண்டங்கொ டுக்கின்றமேர்,
தருபொருள் அளிக்குமொரு திறமிலா தவர்,காவல்
தனிலிருப் போர்,ஞாதியர்,
நலமுற்ற அரசர்கா ரியமதி லிருப்பவர்,
நயிஷ்டிகப் பிரமசாரி,
நண்பர்குற் றஞ்செய்த மேர்,வஞ்ச முற்றமேர்,
நவிலுமொழி நிலைமையில்லார்,
நலம்இதென் றறியாத மேர்,அன்ப தேசமே
சஞ்சரிப் பவர்இவர்களைத்
தனமாதி பிணையிலுக்(கு) உரியரல் லார்"என்று
சாற்றுவன் காத்யாயனன்;
மலைவற்ற அழிவேனை ஆளுநம்மரு சோதியே!
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அனு தினமு(ம்)நினை தரும்இடைய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[உஅ. பிணைபட்டவர்க்குக் கொடுக்கு மியல்பு]

கடனுடை யவன்வெற தேசவா சஞ்செயின்
காட்டிம்அப் பிணையனுக்குக்
காலவள வதுகொடுத் திடல்வேண் டும்;அதிலவன்
கண்டே யழைத்துவந் து
திடனுடைய தனிதனுக்(கு) ஒப்பித்தல் வேண்டும்;இது
செய்யாது விடினும்அவனை யன்
செத்துவிடி னுஞ்சொன்ன பிணையன்அக் கடனைத்
தெலுத்தல்வேண் டும்;சுதர்க்குத்
தொடர்வில்லை; அன்றிப் பொருட்பிணையன் மரணம்உறின்
சுதர்அப்பொ ருட்(கு)உத்தரம்
சொல்லல்வேண் டும்;வௌத் திரர்தமக்(கு) அத்தொடர்வு
சூழாது நீங்குமென்பார்;
வடதிசையில் முனிவருக்(கு) அருள்செய்த போதனை!
டங்கிடன்முத் தைபடைத்தவள்
மனதில்அனு தினமும்நினை தருங்இமய மலைவணங்க
மருவுபழ மலைநாதனை!

[உகூ. தலைவர் இயல்பு]

"அன்னையொடு தமையன்-பிதாஇவரை யுள்ளவன்,
அடுத்துப் பிழைக்கின்றவன்,
அரிவை,சீ லன்,பதி னேழ்வயதி னுக்குளான்,
அவனடிமை இவ்வறுவரும்
உன்னியொரு காரியஞ் செய்யின்அவர் தலைவர்அதை
ஒவ்வாத போதுநீங்கும்;
உன்மத்தன், அச்சமுற் றோன்செய்த காரியம்
உயர்வேந்த னல்விலகிடும்;

சொன்னவுறு வரைமுதல்வ ராகநிய மித்தபின்
தோன்றுகரு மங்களெல்லாம்
தொன்னைமைய தியதுகில்வ னேசெய்த தாகும்"எனச்
சுரர்குரு மொழிந்ததன்றே?
வன்னமயில் வாகனனே யீன்றசக படக்கா!
மதிபன்முத் தையபமதவேள்
மனதில்அனு தினமும்(ம்)நினை தரும்இய மலிவனிதை
மருவுபழ மலாதனே!

[10. வட்டி வாங்கும் இயல்பு]

"நன்றியுறு நேயரல்ல ரந்தவொரு பொருளிற்கு(ம்)
நவில்சரக் குக்கொண்டபின்
நாடுதே சாந்தரம் போனவண் பொருளிற்கு(ம்)
நாலுட னிரண்டுமாதம்
சென்றபின் னும்பணதி முதலான பொருள்வாங்கித்
தேசாந் தரத்(து)எகிடின்,
செலவருடம் ஒன்றின்மே லுந்சேர்ந்த வூரிற்
சிறந்திருந் தங்கேட்டபேர்
ஒன்றினு மளித்திடா தொழிபின்கொ டுத்தநாள்
ஒத்தும்வாங் கிடவட்டி"என்(று)
உண்மையுணர் நாதன் காத்தியா யனனிவர்
உரைத்தமொழி நிலைமையன்றே?
மன்றல்கமழ் கொன்றைபுனை செஞ்சடா டவியனே!
மதிபன்முத் தையபமதவேள்
மனதில்அனு தினமும்(ம்)நினை தரும்இய மலிவனிதை
மருவுபழ மலாதனே!

[ஈக. வட்டி யில்லாத விடயம்]

"வேதனைப் பொருள், பிணைப் பொருள், கொக்கர் தண்டம்
விதித்தபொருள்; கட்பினர்க்கு
விசுவாச மாகக் கொடுத்தபொருள், வட்டிநிலு
வைப்பொருள், விடக்குப்பொருள்,
சீதனப் பொருள், நியா சப்பொருள், கடன்செலுத்
திடவந்த போதுதணிகன்,
செப்புஞ் வழக்கால் மறுத்ததீன நடுவர்கண்
சேர்த்ததின முதலப்பொருள்,
கோதில்அறு போகஉற்ட் சட்டின்மேல் வாங்குபொருள்,
'கொள்சரக் கின்விலையிணக்
கொடுத்,'என்று கேளாத வசையுமப் பொருளுறவு
கொடுத்தபொருள், இவைகட்கெலாம்,
மாதவத் தோர்வட்டி யில்லை"என் றேமொழிவர்;
மகிபன்முத் தையமதிதேவன்
மனதில்அறு தினமு(ம்)நின தருந்இடைய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[ஈஉ. டுத்தீரர்: பிதாவின் கடனைக் கொடுக்கு மியல்பு]

"கடனுற்ற தந்தை:நற் றிறமற் றிருந்திலும்,
கனதோயி னுல்மெலியி னிடம்,
கான்அரிய பரதேய மாகிஇரு படதுவருட
காலடமா கிடம்,வீயி னிடம்,
திடன்உற்ற மைந்தர்அக் கடனளவு மைபவந்
தெளிந்தளித் திடுவதென் றருந்
செப்பிய பிதாவிலெடு சிலமைந்தர் பாகடம்அது
தீர்ந்(து)அய விருக்கமற்றோர்

உடன்உற்று வாழ்ந்திறந்(து) அப்பிதா வின்கடனை
ஒத்துவாழ்ந் தப்புதல்வீர
ஒப்பிக்கொ டுத்திடுவ(து)'' என்றுமா முநிவர்கள்
உரைத்தமொழி நிலைமையன்றே?
மடன்உற்ற அடியேற்கு வரம்உதவு சோதிமீப!
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அணு தினமு(ம்)நினை தரும்இடைய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[ஈக. புத்திர்: பிதாவின் கடனைக் கொடாத இயல்பு]

கள்ளுண்டல், சூதாடல், விரகத்தி னுள்நிலை
கடந்தமெல் லியர்தமக்குக்
கையெழுத் தாலையு(ம்) மொழியியலு மிலைஎன்றுங்
கடனுக ஒப்புக்கொளல்,
விள்அரிய இவையினில் தந்தைபடு கடனையும்,
வேறுமே தபத்தில்அறிய
மேவுதந் தைக்கடன யுப்புதல்வர் ஈயார்;
விளம்பும்இவை யன்றிபிறவித்
தள்அரிய குருடாதி ஈனமைந் தரும்வயது
சார்ந்தபதி னைறளவுநல்
தனையருமை அருகிலுறை னுப்பிதா வின்கடன்
தனைபளித் திடவொணர்கான்;
வள்ளல்என வருபொங்க நாடேந்தி ரன்சுகுண
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அணு தினமு(ம்)நினை தரும்இடைய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[ஈச. பௌத்திரர்: பாட்டன் கடனைக் கொடுக்கு மியல்பு]

"தந்தையை யளித்தமூ தாதைதே சாந்தரந்
தனிலீலகி னும்,வீயினும்,
சந்நியா சம்பெறினும், அவனுடைய கடன்அவன்
தனையன் கொடுப்பதற்குச்
சிந்தைமகிழ் திறமிலா தவனுகின் உறவௌத்
திரன்வட்டி யின்றியதனைத்
தீர்த்தல்வேண் டும்;கள் குடித்தன்மூத லனையிறுற்
சேர்ந்திடுங் கடனீயீயார்;
அந்தப் பௌத்திரர் அளித்தசுதர் தம்முடைய
அப்பன்மூ தாதைப்பொருள்
அடையாது விடின்அவன் கடனைக்கொ டார்"என்ன
அருள்உற் றமுநிவோர்களால்
வந்தமொழி யென்றுணர்(வு) அறிந்தவர் புகன்றிடுவர்;
மகிபன்மூத் தனைபடைதோவள்
மனதில்அது தினமூ(ம்)நினை தரும்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[ஈஉ. இன்னர் பட்ட கடனை இன்னர் கொடுப்பது எனல்]

கனைவனது கடனைமனை விபும்,மனைவி யால்வந்த
கடனை யவன்கணவனும்,
கருதுதா யும்தந்தை யும்படுகல்வ ரால்வந்த
கடனையுந் தருகொணைது;
மனைவாளன் படையைபடை யோதுங்"கீர்"என்ற
வசனித்த கடன்மனைவிசம்
மதிகொளா விடினாம் அவ ளுடையகொடா ருனியனடையின்
மனைவிமேய சுதல்வேண்டும்;

கணிவிற்கொள் வேடர், வண்ணார், இடையர், கூத்தாடி,
கள்விணைஞர், செக்கானிவர்
காதலியெ னும்மனைவி படுகடனை யவருடைய
கணவன்கொ டுத்தல்வேண்டும்;
மணிஅரவ பூஷணம் அணிந்தசக ரட்சகா!
மகிபன்முத் தையமதிவேள்
மனதில்அனு தினமு(ம்)நினை தருமம்இமய மலைவனிதை
மருவுபழ மலைநாதனே!

[கூகூ. தலைவன் கடன் கொடுக்கும் இயல்பு]

"தந்தையின் உடன்பிறந் தோர், சகோ தரர், மைந்தர்,
தாயிமுறு மனைவி, சேவன்,
தனை அடித் தோன், ஏவல் யாளர், இவ் எண்வகையர்
தகுகுடும் பங்காத்தி நின்
சிந்தையொடு படுகடனை அத்தலைவன் ஈகவும்,
திரவியம் இலாததாயார்
சிலகடன் பட்டுநன் மாமன்முதல் அன்னியச்
செல்வரை அடுத்திருக்கின்
